International Journal of Linguistics and Computational Applications (IJLCA) ISSN 2394-6385 (Print)
Volume 3, Issue 1, January – March 2016 ISSN 2394-6393 (Online)

# தற்காலப் பயன்பாட்டுத் தமிழ் இலக்கணமும் தொல்காப்பியமும்
# Use of Tholkappiyam in Modern Contemporary Tamil Grammar

முனைவர் இல. சுந்தரம்

*துறைத்தலைவர், தமிழ்ப்பேராயம், SRM பல்கலைக்கழகம், காட்டாங்குளத்தூர் - 603 203*

*ilasundaram@gmail.com*

தமிழின் தொன்மை இலக்கண நூலான தொல் காப்பியத்தைத் தொடர்ந்து பல இலக்கிய இலக்கண நூல்களைக் கொண்டு நீண்டதொரு வரலாற்றுத் தொடர்ச்சியைத் தமிழ்மொழி பெற்றுத் திகழ் கிறது. இத்தகைய தொன்மை, தொடர்ச்சி, வளர்ச்சி ஆகியவற்றைக் கொண்ட தமிழ்மொழி வரலாற்றில், தொல்காப்பியர் காலத்தமிழுக்கும் தற்காலத் தமிழுக்கும் இடையே அதிக அளவில் தோன்றல், திரிதல், கெடுதல் நிகழ்ந்திருக்கிறது. இவற்றை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

தொல்காப்பியமும் பிற இலக்கண நூல்களும் தொல்காப்பித்தையும் தற்கால இலக்கணத் தையும் ஒப்பிட வேண்டியுள்ளதால் தொல்காப்பி யத்தையும் பிறமரபிலக்கண நூல்களையும் ஒப்பிட்டு எந்தெந்த இடங்களில் ஒன்றுபடுகின்றன, வேறுபடு கின்றன என்பதையும் கவனிக்க வேண்டி யுள்ளது. இதனடிப்படையில் தமிழ்மொழி வரல ாற்றில் இலக்கணவரலாறும், இலக்கண வரலாற்றில் தமிழிலக்கணமரபும், தமிழிலக் கணமரபில் தொல்காப்பியத்தின உருவாக்கமும அறியப்படுகின்றன. இத ற்குத் தொல்காப்பியத்தை அடியொற்றி வெளிவந்த ஆய்வு களும் துணை நிற்கின்றன.

தொல்காப்பியத்திற்குப் பின்பு தோன்றிய நூல்களுள் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக் கணத்தையும் கூறும் வீரசோழியம், நேமி நாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல்விளக்கம், சுவாமிநாதம், முத்துவீரியம் ஆகிய ஏழுநூல்களும்

சொல்லிலக்கணத்தை மட்டும் கூறும் பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து ஆகிய இரண்டு நூல் களும் கிடைக்கின்றன. இவற்றைத் தொல்காப் பியத்தோடு ஒப்பிட்டு அவற்றுள் காணப்படும் கூறுகளை ஒற்றுமை, வேற்றுமை, அரிய செய்திகள் என்னும் பொருண்மை நிலையில் அறிந்திருக்க வேண்டியுள்ளது.

தமிழிலக்கணத்தின் வகைப்பாடும் அதன் வளர்ச்சியையும் அறிந்துகொண்டு தொல்காப்பியத்தை அடியொற்றி வெளிவந்த ஆய்வுகளைத் தொகுத்துப் பார்ப்போமேயானால் அவற்றைத் தொல்காப்பியம் பற்றிய பொதுநிலை ஆய்வுகள், தொல்காப்பியமும் ஒப்பீட்டு ஆய்வுகளும், மொழிபெயர்ப்புகள், உரைகள், அடைவுகள் முதலியவற்றைத் தொல்காப்பிய ஆய்வின் வரலாறும் வளர்ச்சியுமாகக் காணலாம்.

மேற்சுட்டியவற்றின் வழி தொல்காப்பிய எழுத்ததிகார, சொல்லதிகார இயல்பகுப்பும் அதில் சுட்டப்படும் இலக்கணக்கூறுகளும் இவற்றைப் பின்பற் றியும் வேறுபட்டும் பின்வந்த இலக்கணநூல்கள் எவ்வாறு செல்கின்றன என்பதும் புலப்படும்.

இலக்கணநூல் செய்யும் போது சுருக்கம் என்ற ஒன்றை முன்னிறுத்தி வந்துள்ளனர். மனனக்கல்வி முறையில் இலக்கணங்களைக்கற்கவும் கற்பிக்கவும் செய்ய வேண்டிய தேவையின் அடிப்படையில் அவர்கள் வாழ்ந்த காலத்திற்கு முன்புதோன்றிய இலக்கணநூல்களில் சிலவற்றைப் பின்பற்றி புதியவற்றை உருவாக்கியுள்ளனர். அவ்வாறு பின்பற்றுபவற்றுள் சில இலக்கணக்கூறுகள் வழக்கொழிந்து போனவையாக அதாவது அவர்கள் காலத்தில் பயன்பாட்டில் இல்லாமல் இருந்தவற்றை நீக்கியும் புதிதாகச் சில கூறுகள் தோன்றுதலும் வளர்ச்சி பெறுதலும் நிகழ்ந்திருக்கின்றன. ஆகவே, அவற்றை உட்படுத்திப் பழைய இலக்கணங்களிலிருந்து சிறிது மாறுபட்டுச சிலவற்றை விட்டுவிட்டுச் சுருக்கமாக இலக்கணநூல்கள் புதிதுபுதிதாகத் தோற்றம் பெற்றுள்ளன. மேலும், ஒருவர் உருவாக்கிய இலக்கணநூல் வாய்மொழி இலக்கண மாகக்கூட இருக்கலாம். அது அனைவருக்கும் போய்ச்சேராமல் இருந்திருக்கலாம்.

தொல்காப்பியத்திற்குப் பிறகு பல்வேறு இலக்கணநூல்கள் இங்குத் தோன்றியுள்ள போதிலும் அவை அதனதன்தன்மையில் சிறப்பாக நிலைபெற்றிருந்தாலும் தொல்காப்பியத்தோடு அவற்றை ஒப்பவைத்து எண்ணும் போது அவற்றின் விழுமியங்கள் மாறுபடவே செய்கின்றன. தமிழ்ச் சமூகத்தின் தொன்மை மரபின் அடையாளமாக ஒரு செறிவான தன்மைக்குள் கட்டப்பட்டுப் பலநூற்றாண்டு களைக்கடந்து தொல்காப்பியம் வாழ்ந்து வருகிறது. இத்தனை நூற்றாண்டுகள் நிலைபெற அதன் திட்டமிட்ட முறையிலான ஒழுங்கமைவும் மற்றும் செய்நேர்த்தி, எல்லாக் காலத்திற்குமான பொருத்தப்பாடு, பல்வேறு காலங்களில் எழுந்த பலபல உரைகள், முதனூல் வழிநூல் என்ற மரபில் பிற்கால இலக்கணங்களுக்கு முதனூலாக நின்றமைதல்,சமயச்சார்பின்மை ஆகிய அனைத்தும் மிகமுக்கியக் காரணங்களாகஅமைகின்றன.

தொல்காப்பியமும் மொழியியலும்

தொல்காப்பியத்தைத் தற்காலத் தமிழ் இலக்க ணத்தோடு ஒப்பிட வேண்டுமானால் தொல்காப்பியமும் மொழியியலும் எந்தெந்த இடங்களில் பொருந்திப் போகின்றன என்பதைக் கண்டறியவேண்டும். தொல் காப்பியத்தில் காணப்படும் ஒலியியல், ஒலியனியல், உருபனியல், உருபொலியனியல், தொடரியல், பொருண்மையியல் கருத்துகளைத் தொகுத்துப் பார்க்க வேண்டும். இதற்குத் தொல்காப்பியத்தை மொழியியல் அடிப்படையில் அணுகி ஆய்வு செய்யப்பெற்ற நூல்களை வகைப்படுத்தித் தொகுத்துப் பார்க்கலாம்.

மொழியைப் பற்றிய ஆராய்தல் என்னும் துறையாகத் தனித்து உருவான மொழியியல் துறை மொழியின் தோற்றத்தையும் அதன் அமைப்பினையும் பல்வேறுநிலைகளில் பகுத்தாராய்வதற்குப் பெரும் துணைபுரிகிறது. மொழியியலின் இச்சிந்தனைமரபின் முன்னோடியாய் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர்த்தோன்றிய தொல்காப்பியம் விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இலக்கணமும் மொழியியலும் தனித்தனித் துறைகளாக இருந்த போதிலும் அவை இரண்டுக்குமிடையில் உள்ள ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் ஒன்றுட னொன்று இணைந்து செல்வதை அறியமுடிகிறது.

பழமையும் புதுமையும் என்னும் நிலை யில் இலக்கணத்திற்கும் மொழியியலுக்கும உள்ள உறவையும் வளர்ச்சி நிலையையும் அறிந்து கொள்ளலாம். பதினெட்டாம் நூற்றாண்டு வரை மரபிலக்கணமாக இருந்த தமிழிலக்கணம் மேலை நாட்டுத்தாக்கத்தால் இன்று மொழியியல் இலக்க ணமாக மாற்றம் பெற்றுள்ளது.

மொழியியலின் வகைகள் என்னென்ன என்பதையும் அவ்வகைப்பாடுகள் தமிழில் எவ்விதம் பொருந்திப் போகின்றன என்பதையும் அவ்வகைப் பாடுகள் குறித்துத் தொல்காப்பியத்தில் எத்தகைய செய்திகள் உள்ளன என்பதையும் தொகுத்துப் பார்க்கமுடியும். இதன்வழி தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ள மொழியியல் கூறுகளைத் தனித்து அடையாளம் காணமுடியும். இவ்வகையில் மொழியியல் பிரிவுகளும் அதன்வகைப்பாடும் என்னும் நிலையில் விளக்கமொழியியல், ஒப்புமொழியியல், வரலாற்று மொழியியல், பயன்பாட்டு மொழியியல், சமுதாய மொழியியல், மானிட மொழியியல், கணினி மொழியியல் போன்ற வகைப்பாடுகள் குறித்து விளக்க முனையலாம்.

மொழியியல் வகைப்பாட்டுநிலை ஆய்வும் தொல்காப்பியமும் என்னும் நிலையில் தொல்காப்பியத்தையும் மொழியியலையும் ஒப்பிட்டு ஒலியியல், ஒலியனியல், உருபனியல், உருபொலியனியல், தொடரியல், பொருண்மையியல் என்னும் மொழியியல் கூறுகளை ஒப்பிட்டுப்பார்க்கலாம். இதன்வழி இன்று மொழியியல் துறையில் வகைப்படுத்தப்படும் பெரும்பான்மையான கூறுகளைத் தொல்காப்பியர் அன்றே தொல்காப்பியத்தில் பலநிலைகளில் பதிவு செய்துள்ளார் என்பதை அறியமுடியும்.

தொல்காப்பியத்தையும் மொழியியலையும் ஒப்பிட்டுச் செய்யப் பெற்ற நூல்களைத் தொகுத்துப் பார்க்கும் போது தான் தொல்காப்பியத்தையும் மொழியியலையும் இணைத்து எத்தகைய ஆய்வுகள் தமிழில் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதை அறிய முடியும். மேலும், இன்னும் எத்தகைய ஆய்வுகள் இவ்வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் அறியமுடியும்.

தொல்காப்பியம் இன்றைய பயன்பாட்டு நிலையில்...

தமிழ் இலக்கண வரலாற்றை நோக்கும் போது தொல்காப்பியத்திற்குப் பின்வந்த அனைத்து நூல்களுமே அவ்வக்கால மொழிமாற்றங்களை உள்ளடக்கி, வழக்கில் இல்லாதவற்றை நீக்கி, சூழல், சமயம் போன்றவற்றைச் சார்ந்து சுருக்கம் என்னும் நிலையில் பல்வேறு இலக்கணநூல்களாகத் தோற்றம் பெற்றுள்ளன. பழஞ்சொல் வீழ்ச்சியும் புதுசொல் புகுதலும் காலந்தோறும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. தனக்குமுன் நிலவிய இலக்கணக் கொள்கைகளை இலக்கணமாக முறைப்படவகுத்து, காலத்திற்கு ஏற்ப மொழி வளரும் என்ற அறிதிற னையும் உணர்ந்து சில இலக்கண விதிகளையும் புறனடைகளையும் தழுவுவிதிகளையும் தொல்காப்பியர் வகுத்துள்ளார்.

தொல்காப்பியத்தின் தற்காலப்பயன்பாட்டை அறிந்து கொள்ளும் போது மொழியில் ஏற்பட்ட மாற்றங்களை அடையாளம் காணமுடியும். இருசொற் புணர்ச்சியில் தோன்றல், திரிதல், கெடுதல், இயல்பு என நான்கு நிலைகளில் மாற்றங்கள் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் கணித அடிப்படையிலான மொழியின் புணர்ச்சி நிலை இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் மாற்றம் பெறவில்லை. இதுதமிழ் மொழி யின் ஒருவகைக் கட்டமைப்பு ஆகும். இந்தக் கட்டமைப்பு விதியைத் தொல்காப்பியர் காலத் தில் இருந்த இலக்கணக் கூறுகளையும் தற்காலப் பயன்பாட்டில் உள்ள இலக்கணக் கூறுக ளையும் ஒப்பிட்டுப் பார்க்க எடுத்தாள முடியும்.

இந்தவகையில் தொல்காப்பியர் குறிப்பிட்டுச் சென்ற தமிழ் மொழியின் இலக்கணத்திலிருந்து தற்காலத்தில் எந்தவகையிலான இலக்கணக்கூறுகள் தோற்றம் பெற்றுள்ளன (தோன்றல்); மாற்றம் பெற்றுள்ளன (திரிதல்); வழக்கிலிருந்து மறைந்துள்ளன (கெடுதல்); மாறாதுநிலை பெற்றுள்ளன (இயல்பு) என்ப வற்றைக் கண்டறியலாம். அதாவது, தொல்காப்பிய எழுத்ததிகாரத்தையும் சொல்லதி காரத்தையும் 21 ஆம் நூற்றாண்டின் இக்காலப் பயன்பாட்டுத்தமிழ் எழுத்து, சொல்லிலக்கணங் களோடு ஒப்பிட்டு, ‘தோன்றல்’ என்ற பகுப்பில் புதியதாகத் தோன்றிய வற்றையும் ‘திரிதல்’ என்ற பகுப்பில் மாற்றம் பெற்ற வற்றையும் ‘கெடுதல்’ என்றபகுப்பில் தற்கால நிலையில் பயன்பாட்டில் இல்லாதவற்றையும் ‘இயல்பு’ என்னும் பகுப்பில் மாறாதுநிலை பெற்றவற்றையும் வகைப்படுத்தலாம். ‘தோன்றுதல்’ என்னும் பகுப்புபல் வேறு நிலையில் விரிந்து செல்வதாலும் மொழியியல் அடிப்படையிலான தற்கால இலக்கணக்கூறுகள் நுணுகி ஆராயப் பெற்றுள்ளதாலும் புதிதாகத் தோன்றியவற்றைத் தனிநிலையில் ஆய்வுசெய்யும் வகையில் தரவுகள் விரிவான நிலையில் செல்வ தாலும் இங்குப் புதிதாகத் தோன்றிய வற்றைவிடுத்து, திரிதல், கெடுதல், இயல்பு என்னும் மூன்று நிலைகளில் மட்டும் தொல்காப்பிய எழுத்து, சொல்லதிகாரங்களை மட்டும் இங்கு ஆராய்வோம்.

‘தற்காலநிலையில் பயன்பாட்டில் இல்லாதவை’ என்ற பகுப்பை அதன் காரணத்தின் அடிப்படையிலும் அமைப்பின் அடிப்படையிலும் ‘முழுநூற்பாவும் பயன் பாட்டில் இல்லாதவை’, ‘ஒரேநூற்பாவில் நிலைத் தவையும் நிலை பெறாதவையும்’, ‘சொல் வழக் கொழிந்ததனால் நிலைபெறாதவை’, ‘செய்யு ளுக்குரியது என்பதால் பயன்பாட்டில் இல்லாதவை’ என்ற நான்கு வகைகளில் பகுத்துத் தொல்காப்பிய எழுத்ததிகார, சொல்லதிகார நூற்பாக்களை ஆராயலாம். ஒரே நூற்பாவில் நிலைத்தவையும் நிலைபெறாதவையும் என்னும் பகுப்பில் உள்ள ஒவ்வொரு நூற்பாவிலும் கூறப்பட்டுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட விதிகளுள் ஒன்றிரண்டு நிலைத்தும் ஒன்றிரண்டுநிலை பெறாமலும் உள்ளன. எனவே, அவற்றைத் தற்காலத்தில் பயன்பட்டு வருவதாகவே கருதவேண்டும்.

மொழியில் எந்த வகையான இலக்கணக் கூறுகள் அதிகமாகத் தற்காலப்பயன் பாட் டில் இல்லாமல் போயு ள்ளன என்பதைத் தொகுத்துப் பார்க்க இந்த வகையான ஆய்வு உதவும். இவ்வகையில் தொல்காப்பியத்துள் அமைந் துள்ள உலகப் பொது இலக்கணம், தமிழ் மொழியின் அடிப்படைக் கட்டமைப்பு, புறனடையும் தழுவு விதிகளும் ஆகிய மூன்று முக்கியக்கூறுகளையும் தொல்காப்பிய எழுத்ததிகார, சொல்லதிகார விதிகள் தற்காலநிலையில் மாறாதுநிலை பெற்றதற்குரிய காரணங்களாகக் குறிப்பிடலாம்.

இதே போல நிலைமொழியையும் வருமொழி யையும் தனிச்சொல் கொண்டு குறிப்பிட்டமை, சொல்லின் வழக்கின்மை, செய்யுளுக்குரியது ஆகிய மூன்று முக்கியக் கூறுகளையும் தற்கால நிலையில் பயன்பாட்டில் இல்லாமல் போனதற்கான காரணங்களாகக் கூறலாம்.

தொல்காப்பியர் கண்டுணர்ந்த தமிழ்மொழியின் அமைப்பும், தற்காலத்தில் பயன்பாட்டில் இருக்கும் தமிழ் மொழியமைப்பும் எவ்வாறு பொருந்திப் போகின்றன? வேறுபடுகின்றன? என்பதை அடையாளம் காணமுடிகிறது. இவ்வாறு தனித்து அடையாளப் படுத்துவதன் வாயிலாக மொழியில் எந்தக் கூறுகள் மறைகின்றன, புதிதாகத் தோன்றுகின்றன, மாற்றம் பெறுகின்றன, இயல்பாக மாறாது தொடர்கின்றன என்பவற்றை இனம்கண்டு தொல்காப்பியர் காலத்திலிருந்து மாறுபட்ட மொழியின் வளர்ச்சியைப் பின்வருவோருக்கு எளிமைப்படுத்தி உரைக்க முடியும்.

தமிழ் மொழி தொன்மை, தொடர்ச்சி, வளர்ச்சி என்னும் பாங்கில் நிலை பெற்றுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொல்காப்பியர் கூறிய தமிழ்மொழியின் அமைப்பும் இலக்கணக் கூறுகளும் இன்றளவும் அடிப்படையில் மாற்றம் பெறவில்லை. சொல் பயன்பாட்டு நிலையில் புணர்ச்சிகள் மாற்றம் பெற்றுள்ளன. எனினும், அதன் கட்டமைப்பு மாறவில்லை. தொல்காப்பிய விதிகள் சங்க இலக்கியத்தையும் மற்ற பழங்காலத் தமிழ்ப் படைப்புகளைப் படிக்கவும் உதவி வருகின்றன என்பதும் நோக்குதற்குரியது.

தொல்காப்பியத்திற்குப்பின்தோன்றிய இலக்கண நூல்கள்

ஒவ்வொன்றும் அவ்வக்காலச் சூழலின் தேவையையும் வழக்கொழிந்து போனவற்றை அல்லது அவ்வக் காலத்தில் தேவையில்லை என்று கருதியவற்றை நீக்கியும் மனனப்பாடத்திற்காகச் சுருக்கியும் அவ்வக் காலங்களில் எழுந் துள்ளன. இந்நிலையில் மொழியியல் அடிப்படை யிலான, ஆங்கிலத்தின் அடிப்படை யிலான இலக்கணக் கல்வியும் அதன் பயன்பாடும் பெருகி வந்த நிலையில் தொல்காப்பிய நூற்பாக்கள் ஒவ்வொன்றையும் அதன் தற்காலப் பயன்பாட்டையும் பொருத்தத்தையும் கண்டறிய வேண்டி யிருந்தது. இவ்வாறு ஆராயப் பெற்றதன் வாயிலாக மொழியில் எவ்வகையிலான இலக்கணக்கூறுகள் மாறாது நிலைபெற்றுள்ளன; மாற்றம் பெற்றுள்ளன; பெருவழக் கில்லாமல் போயின போன்றவை கண்டறியப்பட்டுள்ளன.

இலக்கியப் படைப்பிற்கு உதவுவதற்காக எழுதப்பட்டஒருமுழுமையான தமிழ் மொழி இலக்கணம் தொல்காப்பியம் ஆகும். இந்த இலக்கணத்தை உரை நடை இலக்கணமாகத் திகழும் இக்காலத் தமிழோடு ஒப்பிடும் போதும் அதன் அடிப்படைக் கூறுகள் மாறவில்லை என்பது தெரியவருகிறது. தொல்காப்பியக் கருத்துகளையும் தற்காலத்தமிழ் இலக்கண நூல்களையும் நேரடியாக ஒவ்வொரு விதியையும் ஒப்பிட்டு இவையெல்லாம் பொருந்தி வருகின்றன இவையெல்லாம் பொருந்தி வரவில்லை என்று மட்டும் சுட்டமுடியாது. ஏனெனில், தொல்காப்பியம் என்பது அக்காலத்தில் நிலவிய தமிழ்மொழியின் முழுமையான இலக்கணம். ஆனால், இக்காலத்தில் அதுபோன்று தற்காலத் தமிழின் முழுமையான இலக்கணத்தைக்கூறும் நூல்கள் தோற்றம் பெறவில்லை. தற்காலத் தமிழ் இலக்கணமாகக் காணக்கிடக்கின்ற நூல்களில் கூறப்பட்ட முறைகளின் அடிப்படையில் வகைப்படுத்தி எடுத்துக்கொள்ளப்பட்டன. மரபிலக்கணம் சார்ந்தும் மொழியியல் சார்ந்தும் பரவலான கூறுகளை அறிஞர்கள் அவரவர் மனத்திட்பத்திற் கேற்ப இலக்கண நூல்களாக உரைநடை வடிவில் எழுதியுள்ளனர். இவ்வாறு எழுந்த நூல்களில் இடம் பெற்றுள்ள பயன்பாட்டுத் தமிழ் இலக்கணத்தின் கூறுகளை மனத்தில் உள்வாங்கிக் கொண்டு தொல்காப்பியத்தை உரையாசிரியர்களின் உரை விளக்கத்தோடு அணுகியே ஆய்வு மேற்கொள்ள முடியும்.

தொல்காப்பியர் காலத் தமிழ் மொழிய மைப்பையும் தற்காலத் தமிழ்மொழியமைப்பையும் ஒப்பிட்டு எவ்வாறான கூறுகள் மாறுகின்றன? மாறாமல் தொடர்ந்து வழங்கி வருகின்றன? என்பனவற்றைக் கண்டறிவதற்கான முயற்சியாக இதனை மேற்கொள்ளலாம். தற்காலப்பயன்பாட்டில் இல்லை என்ற வகையில் ஒதுக்கிய சில விதிகளும் சொற்களும் பெருவழக்காக இல்லாவிட்டாலும் சில வட்டாரங்களில் பயன்பாட்டில் இருக்கலாம். எழுத்து வழக்கில் பெருவழக்காக உள்ள வற்றின் அடிப் படையில் இந்த வகைப்பாட்டினைக் கருதலாம். இவ்வாறு பயன்பாட்டில் இல்லை என்று ஒதுக்கிய சொற்கள் எதிர்வரும் காலங்களில் பயன் பாட்டுக்கு வரலாம் என்ற புரிதலும் இருக்கவேண்டும்.

மாறாமல் நிலை பெற்றதற்கு முக்கியக் காரணம் எல்லா மொழி களுக்குமான பொது இலக்கணம் அதில் அடங்கி யுள்ளதாகும். இதனாலேயே தொல்காப்பியமும் மொழியியலும் பெருமளவில் பொருந்திப்போகிறது. தமிழ் மொழியின் அடிப்படை இலக்கணக்கூறுகள்(Core Grammar) மாற்றம் பெறவில்லை. புணர்ச்சி நிலையில் இரு சொற்களுக்குள் நடைபெறும் தோன்றல், திரிதல், கெடுதல் ஆகியவற்றில் சில மாற்றங்கள் எழுந்துள்ளன. தொல்காப்பியர் பெரும் பான்மையாகச் சுட்டியுள்ளவை தமிழ் மொழிக்கு மட்டுமான தன்மைகள் மட்டுமன்றிப் பொதுவாக எல்லா மொழிகளுக்கும் பொருந்தக் கூடிய இலக்கணக் கூறுகளாக(Universal Grammar) உள்ளன. எனவே, பெரும்பான்மையான கூறுகள் இன்றளவும் எவ்வகை மாற்றமுமின்றி வழங்கி வருகின்றன.

‘தமிழ் மொழியின் சிறப்பு, அதன் தொன்மை என்பதைக் கடந்து தொடர்ச்சியான பயன் பாட்டிலேயே இருக்கிறது’ என்ற கூற்றுக்கு ஏற்பத் தமிழ் மொழியின் அமைப்பு வழங்கி வருகிறது என்பதை அறியமுடியும். இத்தகைய தன்மையால், பெரும்பான்மையான கூறுகள் இன்றளவும் எவ்வகை மாற்றமுமின்றி வழங்கி வருகின்றன. இந்தத் தொடர்ச்சியின் வலிமையே தமிழ் மொழியைப் பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் இன்றளவும் நீடித்திருக்கச் செய்துள்ளது.

தமிழ் மொழியின் அமைப்பினைக் கூறும் தொல்காப்பியத்தைத் தற்காலப்பயன்பாட்டின் அடிப் படையில் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தொல்காப்பியர் காலத் தமிழுக்கும் தற்காலத்தமிழுக்கும் இடையே எத்தனை மொழிக்கலப்பு தமிழில் நிகழ்ந்திருந்தாலும் தமிழ் மொழியின் அமைப்பும் அதன் அடிப்படைக் கட்டமைப்பும் மாறவில்லை. இதனாலேயே, தொல் காப்பிய நூற்பாக்கள் பலவும் இன்று பொருந்தி வருகின்றன.

இதேபோல, சில நூற்பாக்கள் தற்காலத் திற்குப் பொருந்திவராமல் இருப்பவை மொழியில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதைக் காட்டுகின்றன. மாற்றங்களை இன்னும் வகைப்படுத்தி ஆராய்ந்ததில் சில விதிகள் தற்காலத்தில் பெருவழக்கின்றிப் பயன் பாட்டில் இல்லாமல் போய்விட்டன, சில விதிகள் திரிபடைந்துள்ளன என்பதை வெளிப்படுத்துகிறது.

தமிழ் மொழியின் அடிப்படை இலக்கணக் கட்டமைப்பு மாறவில்லை என்பதும் அதனா லேயே இன்றளவும் தொல்காப்பியம் பயன் பாட்டில் இருந்து வருகிறது என்பதும் தமிழ்மொழியின் அமைப்பை எல்லா நிலைகளிலும் உள்வாங்கித் தொல்காப்பியர் தொலை நோக்குப் பார்வை கொண்டு தொல்காப்பியத்தை வகுத்துள்ளார் என்பதும் இதன் வழி அறியலாகும் உண்மையாகும்.

தமிழ் மொழியின் தொன்மையும், தொடர்ச்சி அறுந்து போகாத பயன்பாட்டையும், கால ஓட்டத்தால் ஏற்படும் வளர்ச்சியை உள்வாங்கிக் கொள்ளும் நெகிழ்வுத் தன்மையையும் கொண்டமைந்துள்ளது தமிழ் மொழி என்பதைப் புலப்படுத்துகிறது. தொல்காப்பியம் என்றும் இலக்கண ஆராய்ச்சிக்கு அடித்தளமாய் தொடக்கமாய் அமையும்.

## துணைநூல்கள்


[1] அகத்தியலிங்கம் ச. முருகையன் க. (ப.ஆ), 1972, தொல்காப்பிய மொழியியல் (க.தொ.), மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம் - 608 001.

[2] சண்முகதாஸ். அ., 2008, தமிழ்மொழி இலக்கண இயல்புகள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை - 600 098.

[3] சித்தார்த்தன், 2003, இலகு தமிழில் இனிக்கும் தமிழ் இலக்கணம், நர்மதா வெளியீடு, பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 600 017.

[4] சீனிவாசன் இரா., 2000, தமிழ் இலக்கண மரபுகள், தி பார்க்கர், இராயப்பேட்டை, சென்னை - 600 014.

[5] சுப்பிரமணியன் ச.வே. (ப.ஆ.), 2009, தமிழ் இலக்கண நூல்கள் மூலம் முழுவதும் குறிப்பு விளக்கங்களுடன், மெய்யப்பன் பதிப்பகம், புதுத்தெரு, சிதம்பரம் - 608 001.

[6] சுப்பிரமணியன் பா.ரா., (ப.ஆ), 2005, சொல் வழக்குக் கையேடு, மொழி அறக்கட்டளை, ஈஞ்சம்பாக்கம், சென்னை - 600 041.

[7] சுயம்பு பெ. 2004, தமிழ்மொழி அமைப்பும் வரலாறும், இலக்குமி நிலையம், இராயப்பேட்டை, சென்னை - 600 014.

[8] நு.்.மான் எம்.ஏ., 2007, அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம், கருப்பூர் சாலை, புத்தாநத்தம், திருச்சி - 621 310.

[9] பரமசிவம் கு., 2011, இக்காலத் தமிழ் மரபு, அடையாளம், கருப்பூர் சாலை, புத்தாநத்தம் -621 310.

[10] பரமசிவம் கு., 2011, இக்கால மொழியியல் அறிமுகம், அடையாளம், கருப்பூர் சாலை, புத்தாநத்தம் - 621 310.



**முனைவர் இல. சுந்தரம்** சென்னை SRM பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராயத்தில் துறைத்தலைவராகப் பணியாற்றி வருகிறார். .M.A.(Tamil), M.A. (Ling.).,M.A. (JMC)., M.Sc.(I.T)., MCA., MBA., M.Phil., PGDCA., Ph.D., ஆகிய பட்டங்களைப் பெற்ற இவர் தொல்காப்பியத்திற்கு மாணவர் உரை, இளவேனில் என்னும் கட்டுரைத் தொகுப்பு, கணினித்தமிழ்(Tamil Computing) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். அறிஞர் த.வி. சாம்பசிவம் பிள்ளையின் மருத்துவ அகராதியை மறுபதிப்பு செய்துள்ளார். அயல்நாடுகளில் தமிழ்க்கல்வி வழங்கு வதற்குத் தகுதியான ஆசிரியர்களை உருவாக்கு வதற்காக, அயலகத் தமிழாசிரியர்(Diaspora Tamil Teacher) என்னும் ஓராண்டுப் பட்டயப் படிப்பினை உருவாக்கித் தென்னாப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, கனடா முதலிய நாடுகளில் நடத்திவருகிறார். வள்ளுவர் விருது, கணினித்தமிழ் விருது, தமிழ்நிதி விருது, அறிவியல் களஞ்சியம் விருது முதலியவற்றைப் பெற்றுள்ளார்.